## உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் அதிகாரம்

### பகுதி I

*திருமதி. ஜயரூபி தனுசன், மூத்த உதவிப் பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

### நிதியியல் வாடிக்கையாளர் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு கூட்டு முயற்சியுடன் இணைந்துகொள்ளுதல்

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு என்பது நிதியியல் பணி வழங்குவோரின் நியாயமற்ற மற்றும் பொறுப்பற்ற நடைமுறைகளிலிருந்து நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாத்துக்கொள்வதனை நோக்கி மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய முன்னெடுப்பாகும். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான (2022) அமைப்பின்படி, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பானது நிதியியல் வாடிக்கையாளர்களின் கையேற்பு தொடர்பில் அவர்களை நடத்துகின்ற விதத்தில் பின்பற்றப்படும் நியாயமான தன்மை மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிமுறைகளையும் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் பயன்பாட்டினையும் அதேபோன்று நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புடன் அவர்களது நெருங்கிய தொடர்புகளையும் உள்ளடக்குகிறது.

இப்பின்னணியில், நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புபட்ட கோட்பாடுகளையும் மிகச்சிறந்த நடைமுறைகளையும் நடைமுறைப்படுத்தலானது முன்னுரிமையினைப் பெறுகிறது. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தரம்வாய்ந்த நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் அணுகுவதனை அதிகரிப்பதற்கும் முறைசார்ந்த நிதியியல் முறைமைகளுடன் வாடிக்கையாளர்களை ஒருங்கிணைப்பதற்கும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதும் அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்ற அதேவேளையில் சமகாலத்தில் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினையும் பேணுகின்றது.

இவ்வுலகளாவிய முயற்சிகளுக்கு மத்தியில், இலங்கை மத்திய வங்கி, நியாயமற்ற மற்றும் பொறுப்பற்ற வியாபார நடைமுறைகளிலிருந்து நிதியியல் வாடிக்கையாளர்களை செயற்றிறன்மிக்க விதத்தில் பாதுகாத்துக்கொள்வதற்காக நாட்டினுள் உத்வேகம்மிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை முன்கூட்டியே நிறுவியுள்ள அதேவேளையில் அத்தகைய நடத்தையினை பொறுத்தவரையில் நிவாரணப் பொறிமுறைகளையும் வழங்குகின்றது. இக்கட்டுரையின் நோக்கம் நிதியியல் முறைமையிலுள்ள ஆர்வலர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கட்டமைப்பு பற்றி அறிவூட்டுவதேயாகும்.

### 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் முக்கியமாக, இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்கள், நிதியியல் பணி வழங்குவோரினால் மேற்கொள்ளப்படும் ஆளுகை, நியாயமாக நடத்தும் முறை மற்றும் பொறுப்புவாய்ந்த வியாபார நடத்தை, வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை, முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் நிவாரண

பொறிமுறைகள் சேர்ந்த நிதியியல் வாடிக்கையாளர்களின் நிதியியல் சொத்துக்கள் மற்றும் தகவல்கள் பாதுகாப்பு மற்றும் முக்கியமான நியதிகளின் பொருள்கோடல் மீதான பிரிவொன்று தொடர்பில் கவனத்தினைச் செலுத்துகின்றன. இவ்வொழுங்குவிதிகள் விசேடமாக, இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள், அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பங்கேற்பாளர்கள் ஆகியோருக்கு பொருந்தத்தக்கது என்பதனை கவனத்தில்கொள்ளுதல் வேண்டும். இத்தொடரிலுள்ள இவ்வாரம்பக் கட்டுரை இலங்கை மத்திய வங்கியின் அதிகாரம் மற்றும் நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பில் நிதியியல் பணிகள் வழங்குவோரினால் மேற்கொள்ளப்படும் ஆளுகை என்பன மீது கவனம்செலுத்துகின்றது.

## இலங்கை மத்திய வங்கியினால் என்ன செய்யமுடியும்?

2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ், நிதியியல் பணி வழங்குவோர் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுகின்றார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவர்களை கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும், பரிசோதிப்பதற்குமான அதிகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இது, சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள், நன்னடத்தைக் கோவைகள் என்பனவற்றை வெளியிடமுடியும் என்பதுடன் சந்தை நடத்தையை மேற்பார்வையிடவும் தேவையானவிடத்து ஏனைய புலன்விசாரணைகளை நடத்தவும் முடியும். இலங்கை மத்திய வங்கி அதன் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களூடாக ஏடுகளையும், பதிவேடுகளையும் மற்றும் நிதியியல் பணிவழங்குவோரின் நடவடிக்கைகளையும் பரீட்சிப்பதற்கான அதிகாரத்தினையும் கொண்டிருக்கிறது. இது விசாரணைகளின் பொருட்டு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு போன்ற ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கமுடியும்.

இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் நிதியியல் பணி வழங்குவோரின் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்களைக் கோருதல், ஆவணங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பரிசோதித்தல், பரீட்சிப்புக்களுக்காக பணிமனைகளுக்கு நுழைவதுடன் நிதியியல் பணி வழங்குவோர்களின் நடத்தைகள் பற்றிய அறிவுடைய தனிப்பட்டவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும்.

நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலவுரித்துக்களையும் பாதுகாப்பதற்காக, நிதியியல் வியாபாரத்தின் தன்மை, அளவு மற்றும் சிக்கல்வாய்ந்த தன்மை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு நிதியியல் பணி வழங்குபவர்களின் சந்தை நடத்தைகளைப் பரீட்சிக்கும் பணி இவ்வலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய பரீட்சிப்பின் பின்னர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் சந்தை நடத்தைகள் மீதான அறிக்கையொன்றினை இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிக்கையானது, இவ்வொழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் அல்லது நன்னடத்தைக் கோவை போன்றன கணிசமானளவிற்கு மீறப்பட்டுள்ளனவா என்பது பற்றி பகுப்பாய்வு செய்வதுடன் அத்தகைய மீறல்கள் அல்லது தவறான வியாபார நடைமுறை போன்றவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் விதந்துரைக்கின்றது.

நிதியியல் பணி வழங்குபவர் துறையிலுள்ள அனைத்து தனிப்பட்டவர்களும் இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அவர்கள் தகவல்களை அல்லது கேட்டுக்கொள்ளப்பட்ட ஆவணங்களை வழங்கவோ, அழைக்கப்படும் போது நேர்முகவிளம்பல்களில் கலந்துகொள்ளவோ தவறக்கூடாது. தவறான அல்லது பிழையாக வழிநடத்தப்படக்கூடிய தகவல்களை வழங்கவோ அல்லது இலங்கை மத்திய வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் அவர்களது கடமைகளை ஆற்றுவதற்கு இடையூறு விளைவிக்கவோகூடாது.

## இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகள்

இலங்கை மத்திய வங்கி நிதியியல் பணி வழங்குவோரிடையே ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புக்களை நிலைநிறுத்துவதற்கு பரந்தளவிலான வழிமுறைகளைப் பயன்படுத்திவருகின்றது. இவை ஏற்புடைத்தான ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் அல்லது நன்னடத்தைக் கோவை போன்றவற்றைப் பின்பற்றுவதற்கு இணங்காத நிதியியல் பணி வழங்குவோரை அவற்றைப் பின்பற்ற வலியுறுத்துதல் மற்றும் அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களைப் பணித்தல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இவற்றிற்குப் புறம்பாக, மத்திய வங்கி சாத்தியமான ஒழுங்குமுறைப்படுத்தல் விளைவுகளை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் காரணங்களைக் காட்டுமாறு கோரும் கடிதங்களை அல்லது எச்சரிக்கைக் கடிதங்களை வழங்கலாம். அவசியமான வேளைகளில், பூரணமான விசாரணைகள் மற்றும் மேலதிக ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தொடர்பான இலங்கை மத்திய வங்கி திணைக்களங்களுக்கு மீறல்கள் அல்லது கரிசனைகள் கொண்டு செல்லப்படும்.

## நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கான ஆளுகைச் சபையின் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரங்கள்

நிதியியல் பணி வழங்குவோர் நிதியியல் வாடிக்கையாளர்களின் நலவுரித்துக்களுக்கு தீங்குபயக்கின்ற அல்லது ஒழுங்குவிதிகளை மீறுகின்ற விதத்தில் நியாயமற்ற, ஆற்றலற்ற அல்லது ஒழுங்கற்ற நடைமுறைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என ஆளுகைச் சபை தீர்மானிக்குமாயின் அது தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறது. இவ்வழிமுறைகள் அத்தகைய நடைமுறைகளை நிறுத்துமாறு நிதியியல் பணி வழங்குவோரைப் பணித்தல், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் அல்லது நிதியியல் சாதனங்கள், அல்லது பணிகளின் பண்புகள், நியதிகள் அல்லது நிபந்தனைகளை மாற்றுமாறு கேட்டுக்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கும். ஆளுகைச் சபை சந்தையிலிருந்து நிதியியல் சாதனங்களை அல்லது பணிகளை அகற்றலாம், விளம்பரப்படுத்துகின்ற சாதனங்களை அகற்றுமாறு கட்டளையிடலாம், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இழப்பீடுகளை அல்லது மீளளிப்புக்களை வழங்குமாறு கட்டாயப்படுத்தலாம். அத்துடன் மேற்பார்வைக் கரிசனைகளை கடுமையாக மீறியவர்கள் என நிதியயில் பணி வழங்குபவர்களை பகிரங்கமாக பெயர் குறிக்கலாம். இவற்றிற்குப் புறம்பாக, இது, அத்தகைய பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, இலங்கை மத்திய வங்கியின் பொருத்தமான திணைக்களங்களினூடாக பொருத்தமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியும்.

மேலும், இலங்கை மத்திய வங்கி நிதியியல் பணி வழங்குபவர்களின் நடவடிக்கை காரணமாக மனக்குறைவுடைய வாடிக்கையாளர்களுக்காக பிணக்குகளுக்கு தீர்வுகாணும் மாற்றுப் பொறிமுறைகளையும் வழங்குகிறது. இப்பொறிமுறையின் விரிவான விபரணங்கள் முறைப்பாட்டு கையாளல் நடைமுறைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

## நிதியியல் பணி வழங்குவோரின் பொறுப்புக்கள்

நிதியியல் பணி வழங்குவோரின் பணிப்பாளர் சபை, அல்லது, வெளிநாட்டு வங்கியொன்றாக இருக்குமிடத்து முகாமைத்துவ/ நிறைவேற்றுக் குழு தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணைந்துள்ள கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஒப்புதலளித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கும், அவை நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் ஊழியர்களினதும் முகவர்களினதும் உள்ளகக்கட்டுப்பாடுகளையும் நன்னடத்தைக் கோவையினையும் நிறுவுவதற்கும் பொறுப்புடையதாகும். பணிப்பாளர் சபையானது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு விடயங்களை மேற்பார்வையிடவும் அறிக்கையளிக்கவும், தொடர்பான நடவடிக்கைகளை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்பூட்டல்களைப் பேணவும் வாடிக்கையாளர் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுடன் ஊழியர்களும் முகவர்களும் இணங்கியொழுவதனை உறுதிப்படுத்துவதற்கும் இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்கும் போதுமான முறைமைகளை நிறுவுவதற்குமாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை நியமித்தல் வேண்டும். முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் உள்ளக வியாபார அலகுகளை ஒருங்கிணைத்தல், வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாளல், வாடிக்கையாளர் பாதுகாப்பு நியமங்களுடன் முகவர்களும் மூன்றாம் தரப்பினரும் இணங்கியொழுவதனை மேற்பார்வை செய்தல் என்பன மூலம் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கொள்கைகளும் ஒழுங்குவிதிகளும் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவர். அவர்களது பொறுப்புக்கள் இணங்குவிப்பு இடர்நேர்வுகளை அடையாளம் காணுதல், அவற்றைத் தணிப்பதற்கு முன்கூட்டிய வழிமுறைகளை எடுத்தல், அறிவு நிறைந்த அலுவலர்களை பணிக்கமர்த்தல் ஊழியர்களுக்கும், முகவர்களுக்கும் மூன்றாந்தரப்பினர்களுக்கும் தொடர்பான வாடிக்கையாளர் பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் பயிற்சிகளை வழங்குதல் என்பனவற்றையும் உள்ளடக்குகின்றன. தொழிற்பாட்டு முகாமைத்துவ ஆளணியினர் இக்கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்பான பதிவேடுகளைப் பேணுவதற்கும் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான காலாந்தர அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் பொறுப்புடையவர்களாவர்.

காத்திரமான உள்ளகக் கட்டுப்பாடுகள், அடையாளம் காணுதல், கண்காணித்தல் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளை அறிக்கையிடல் மற்றும் முறைப்பாடுகளைக் கையாளுவதற்கான நடைமுறைகள் என்பனவற்றிற்கான பொறிமுறைகளையும் நிறுவுமாறு நிதியியல் பணி வழங்குவோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும், நிதியியல் பணி வழங்குவோர் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் இடர்நேர்வு முகாமைத்துவம், தகவல்களைப் பரிமாறுதல், முறைப்பாடுகளைக் கையாளல், தரப்பாதுகாப்பு மற்றும் காலாந்தர கண்காணிப்பு நடைமுறைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற பொருத்தமான நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கட்டாயமாக கொண்டிருத்தல் வேண்டும். இக்கொள்கைகளும் நடைமுறைகளும் குறைந்தபட்சம் ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்கும் ஒரு முறையாவது நிதியியல் பணி வழங்குபநர்களின் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்.

## முடிவுரை

முடிவாக, இக்கட்டுரையில் ஆராயப்பட்டவாறு, இலங்கை மத்திய வங்கியின் அதிகாரங்களும் நிதியியல் பணி வழங்குவோரின் பொறுப்பும் இலங்கையிலுள்ள நிதியியல் வாடிக்கையாளரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு

தவிர்க்கமுடியாதவையாகக் காணப்படுகின்றன. இவ்வணுகுமுறையானது, தனிப்பட்டவர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகத்தினரின் நிதியியல் மீளெழுச்சியை வலுப்படுத்துவது மட்டுமன்றி நிதியியல் வாடிக்கையாளர்களின் ஒட்டுமொத்த நலனோம்புகைகளையும் உயர்த்துகிறது. ஆகவே, ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி நிதியியல் வாடிக்கையாளர் உரிமைகளை கண்ணூடாக யதார்த்தமாக்குவதற்கு நிதியியல் பணி வழங்குவோருடன் இணைந்த நிதியியல் வாடிக்கையாளரின் பங்கேற்பினை வலியுறுத்துகின்றது.